[2022 ஏப்ரல் 6

வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**62—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***12039—திருமதி க. சிவகாமசுந்தரி**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலம் பேரூராட்சி, உப்பிடமங்கலத்தில் பால் கொள்முதல் மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலம் பேரூராட்சி, உப்பிடமங்கலத்தில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனினும், பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.

**திருமதி க. சிவகாமசுந்தரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலம் பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி செய்யும் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தினசரி, சுமார் 50 ஆயிரம் லிட்டர் பால், குறைந்த விலையில் தனியார் நிறுவனங்களால் கொள்முதல் செய்யப்படுகிறது. அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில், உப்பிடமங்கலம் பேரூராட்சி, உப்பிடமங்கலத்தில் பால் கொள்முதல் நிலையம் மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும்பட்சத்தில், மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*2022 ஏப்ரல் 6*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில், தற்போது 151 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. நாளொன்றுக்கு சுமார் 85 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கரூர் மாவட்ட சுற்று வட்டாரப் பகுதிகளிலுள்ள தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கொள்முதல் செய்யப்படும் 55 ஆயிரம் லிட்டர் பால், கரூர் குளிரூட்டும் நிலையத்திற்கும், 11 இடங்களிலுள்ள மொத்த பால் குளிரூட்டும் நிலையங்கள்மூலம் 26,500 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, சென்னை இணையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. மீதமுள்ள பால் திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. உப்பிடமங்கலம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலுள்ள 10 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம், சுமார் 4,400 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. மேற்கண்ட பேரூராட்சியிலுள்ள சின்னகவுண்டன்புதூர், வையாபுரிகவுண்டனூர், கஞ்சமனூர், துளசிகுடும்பு, புகையிலை குறிச்சியானூர் ஆகிய தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்த நிலையிலுள்ளன. இச்சங்கங்களைப் புத்துயிரூட்டி, பால் கொள்முதல் செய்ய சாத்தியக்கூறுகள் உள்ளன. உப்பிடமங்கலம் கிராமத்திலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தோரணக்கல்பட்டியில் 50 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் உள்ளது. 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மஞ்சநாயக்கன்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தேசிய பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்* (NPDD) *2021–2022 ஆம் ஆண்டு 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் நிறுவப்படவுள்ளது.*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *மேலும், தற்போது ஏமூர் கிராமத்தில் புதிய நவீன பால் பண்ணை வளாகம் அமைப்பதற்கு*

இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க, குறைந்தது 2 ஏக்கர் நிலப்பரப்பு மற்றும் ரூ.10 கோடி நிதி தேவைப்படும். மேலும், அந்தப் பகுதியில் பால் உற்பத்தி 30,000 லிட்டருக்குக் குறையாது இருக்க வேண்டும். தற்போது மொத்த பால் குளிர்விப்பான்கள், சிறிய அளவிலான பால் குளிரூட்டும் மையமாக, சங்க இடத்திலேயே அதன் உற்பத்தியைப் பொறுத்து, 500 லிட்டர் முதல் 5,000 லிட்டர் கொள்ளளவில் நிறுவப்பட்டு வருகின்றன. மேற்கண்ட காரணங்களால், உப்பிடமங்கலம் பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.*

**திருமதி க. சிவகாமசுந்தரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**63—**

## தொழிற்பயிற்சி நிலையம்

***13871—திரு. க. சுந்தர்:**

*மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உத்திரமேரூர் பகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன். உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள*